

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உடல்நலக்குறைவால் இயற்கை எய்திய அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் பீலா வெங்கடேசன் அவர்களின் இல்லத்திற்கு நேற்று (25.9.2025) நேரில் சென்று, அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் கே.என்.நேரு, திருமதி பி.கீதாஜீவன், மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், அரசு துறைச் செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### தமிழ்நாடு அரசின் முதன்மைச் செயலாளர்

# பீலா வெங்கடேசன் மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



**சென்னை, செப். 26 –**

**தமிழ்நாடு அரசின் முதன்மைச் செயலாளர் பீலா வெங்கடேசன் மறைவுக்கு, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு :–**

**தமிழ்நாடு அரசின் முதன்மைச் செயலாளர் திருமிகு. பீலா வெங்கடேசன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.**

**அடிப்படையில் மருத்துவரான பீலா வெங்கடேசன் அவர்கள், இந்திய ஆட்சிப் பணிக்குத் தேர்வாகி, பல்வேறு முக்கியத் துறைகளில் செயலாளராகப் பணியாற்றிய அனுபவமிக்கவர். கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் சவால் மிகுந்த மருத்துவத் துறைச் செயலாளராகப் பணியாற்றியவர். மேலும் பல பெரும் பொறுப்புகளில் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றிருந்த அவரது அகால மரணம் மிகுந்த வருத்தமளிக்கிறது.**

**அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அரசு உயர் அலுவலர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.**

### சென்னை – வர்த்தக மையத்தில் செப். 27, 28 - இருதினங்கள் நடைபெறுகிறது!

# வேளாண் வணிகத் திருவிழா! முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்!

### உழவர்கள் – பொதுமக்கள் பங்கேற்றுப் பயன்பெற – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!

**சென்னை, செப். 26-**

**நந்தம்பாக்கம் சென்னை வர்த்தக மையத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் செப்டம்பர் 27 அன்று தொடங்கி வைக்கப்பட்டு 27.09.2025 மற்றும் 28.09.2025 ஆகிய இரு தினங்களில் நடைபெறும் "வேளாண் வணிகத் திருவிழா 2025" விழாவில் உழவர்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், மாணவர்கள், பொதுமக்கள் அனைவரும் பங்கேற்றுப் பயன்பெற வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அழைப்பு விடுத்துள்ளார்.**

அதன் விவரம் வருமாறு:-

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பெரும்பாலான மக்களுக்கு வாழ்வாதாரத் தொழிலாக உள்ள வேளாண்மை, அத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் நலன் ஆகியவற்றினை உயர்த்திடும் நோக்கத்தில், தமிழ்நாட்டின் வரலாற்றில் வேளாண்மைக்கென ஐந்து தனி நிதிநிலை அறிக்கைகளை சமர்ப்பிக்கப்பட்டு, கடந்த நான்கு ஆண்டுகளில் பல்வேறு உழவர் நலத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு, வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டன. 2025 - 26ஆம் ஆண்டிலும் பல்வேறு புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு ஆண்டிலும் நடத்தப்பட்ட வேளாண் கண்காட்சி போன்றே இந்த ஆண்டின் முதல் "வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம்" தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 11.06.2025 அன்று ஈரோடு மாவட்டம், பெருந்துறை அருகில் விஜயமங்கலத்தில், இரண்டுநாள் விழாவாக தொடங்கிவைக்கப்பட்டு, பொதுமக்களின் மிகுந்த வரவேற்பிற்கிணங்க மூன்று நாட்களாக, 13.06.2025வரை நீட்டிக்கப்பட்டு மிகச்சிறப்பாக நடைபெற்றது. இக்கண்காட்சி மற்றும் கருத்தரங்கில் பெருந்திரளாக ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பயனாளிகள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

அவ்வகையில், வேளாண்மை மற்றும் தோட்டக்கலை விளைபொருட்களின் மதிப்புக்கூட்டுதல், பதப்படுத்துதல் போன்ற தொழில்நுட்பங்களை கடைப்பிடித்து உள்ளூர் மற்றும் ஏற்றுமதி சந்தை வாய்ப்பினை அதிகரித்தல், கருத்தரங்குகள் மற்றும் கலந்துரையாடல்கள், உற்பத்தியாளர்கள் வணிகர்கள் சந்திப்பு போன்ற பல்வேறு அம்சங்களுடன், உழவர்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், மாணவர்கள், பொதுமக்கள், உணவு பதப்படுத்தும் அமைப்புகள், ஏற்றுமதியாளர்கள், இயற்கை நல ஆர்வலர்கள் உள்ளிட்ட அனைவரும் பயன்பெறும் வகையில் இந்த ஆண்டின் இரண்டாவது நிகழ்வாக "வேளாண் வணிகத் திருவிழா 2025 "நந்தம்பாக்கம் சென்னை வர்த்தக மையத்தில் 27.09.2025 மற்றும் 28.09.2025 ஆகிய இரு தினங்களில் நடத்தப்பட உள்ளது. இவ்விழாவினை மிகச்சிறப்பாக நடத்த தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பு ஏற்பாடுகளை செய்து வருகிறது.

'வேளாண் வணிகத் திருவிழா 2025'ஐ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 27.09.2025



அன்று தொடங்கி வைத்து, உழவர்களுக்கு நலத்திட்டங்களை வழங்கி விழா சிறப்புரை ஆற்ற உள்ளார்கள்.

**பங்கேற்கும் துறைகள் மற்றும் நிறுவனங்கள்!**

வேளாண்மைத்துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பபிர்கள் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, சர்க்கரைத்துறை, விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறை, கால்நடை பராமரிப்புத்துறை, மீன்வளத்துறை, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் (ஆவின்), தமிழ்நாடு உணவு பதப்படுத்தல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் (TNAPEx), பட்டு வளர்ச்சித் துறை, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், ஒன்றிய அரசின் வேளாண் ஆராய்ச்சி நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் மீன்வளப் பல்கலைக்கழகம் போன்ற அரசுத் துறைகள் மற்றும் அவை சார்ந்த கல்வி நிறுவனங்களும் பங்கேற்கின்றன.

இவை தவிர, உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், பாரம்பரிய உணவு உற்பத்தி நிறுவனங்கள், ஏற்றுமதி நிறுவனங்கள், உணவு பதப்படுத்தும் தொழில் நிறுவனங்கள், வேளாண் விளைபொருட்கள் மதிப்புக்கூட்டும் இயந்திர உற்பத்தி நிறுவனங்கள் போன்ற நிறுனங்களும் தங்களது தயாரிப்புகளைக் காட்சிப்படுத்தவும், விற்பனை செய்யவும் இசைந்துள்ளனர்.

**கருத்து விளக்கக் கண்காட்சி அரங்குகள்!**

சங்ககாலம் முதல் தற்காலம் வரை தமிழர்களின் வேளாண் வணிகம். பனை, தென்னை, ஊட்டச்சத்துமிக்க சிறுதானியங்கள், மூலிகைப்பயிர்கள், முருங்கை, மஞ்சள், பலா, முந்திரி, நிலக்கடலை போன்ற பல்வேறு வேளாண் விளைபொருட்களின் சிறப்புகள், மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் மற்றும் மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள். கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம், உழவர் நல சேவை மையங்கள், நகர்ப்புரத் தோட்டம், செங்குத்துத் தோட்டம், நீர் ஊடகத் தோட்டம் (Hydroponics), ஊட்டச்சத்து வேளாண்மை, பாரம்பரிய காய்கறிகள் போன்ற அரசின் பல்வேறு நலத்திட்டங்கள். தேங்காய் மட்டை உரிக்கும் கருவி, எண்ணெய் செக்கு இயந்திரம், பருப்பு உடைக்கும் இயந்திரம் போன்ற மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள். வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்கள் ஏற்றுமதி தொடர்பான விவரங்கள் போன்ற அரசின் அனைத்துத் திட்டங்களையும் ஒரே இடத்தில் தெரிந்து கொள்ள வாய்ப்பாக இக்கண்காட்சி அமையும்.

**கருத்தரங்குகள் மற்றும் கலந்துரையாடல்கள்!**

உழவர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில், உணவே மருந்து, நகர வாழ்க்கையில் ஆரோக்கிய உணவு, ஆரோக்கியமான வாழ்க்கைக்கு சரிவிகித உணவு, உணவு பதப்படுத்துதலும் மதிப்புக்கூட்டுதலும், காய்கறி சாகுபடி முறைகள் மற்றும் மாடித்தோட்டம் மேலாண்மை, பயிர் பாதுகாப்பு, இயற்கை மற்றும் உயிர்ம வேளாண்மை, சிறுதானியங்களில் மதிப்புக்கூட்டுதல், பதப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல், வேளாண் பொருட்கள் சந்தைப்படுத்துதல், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் செயல்பாடுகள் மற்றும் வழிகாட்டுதல், உழவர்களுக்கான மின்னணு சந்தைப் படுத்துதல் (eNAM, சமூக ஊடகங்கள் மற்றும் வலைதளங்கள்), வேளாண் வணிகம் மற்றும் ஏற்றுமதி வாய்ப்புகள், சிறந்த விவசாயிகள் நடைமுறைகள், நஞ்சில்லா வேளாண்மை, போன்ற பல்வேறு தலைப்புகளில் கருத்தரங்குகள் நடத்தப்படும். இதுதவிர முன்னணி வேளாண் தொழில் முனைவோருடன் கலந்துரையாடலும் நடைபெறும். இக்கருத்தரங்குகளில், தொழில்நுட்ப வல்லுநர்களும், அனுபவமிக்க வேளாண் பெருமக்களும், ஏற்றுமதியாளர்களும், உயர் அலுவலர்களும் கலந்து கொண்டு பல்வேறு பயனுள்ள தகவல்களை பகிர்ந்து கொள்ள இருக்கிறார்கள்.

**காட்சி மற்றும் விற்பனை அரங்குகள்!**

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், தொழில் முனைவோர்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் போன்ற வேளாண் தொழில்சார் நிறுவனங்கள் இக்கண்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள விற்பனை அரங்குகளில் தங்களது மதிப்புக்கூட்டப்பட்ட, பதப்படுத்தப்பட்ட உணவு வகைகள், மூலிகை உணவுப் பொருட்கள், பழங்கள், பசுமைக் காய்கறிகள், மதிப்புக்கூட்டும் இயந்திரங்கள், காய்கறி விதைகள், உயர் இரக பழமரக்கன்றுகள், தென்னங்கன்றுகள் போன்ற பல்வேறு பொருட்களை காட்சிப் படுத்துவதோடு மட்டுமல்லாமல் விற்பனையும் மேற்கொள்வார்கள்.

மேலும், வேளாண் விளைபொருட்கள் விற்பனை, சந்தைவாய்ப்பு மற்றும் ஏற்றுமதியினை மேம்படுத்துவதற்காக, வேளாண் விளைபொருட்கள் உற்பத்தியாளர்கள் மற்றும் மதிப்புக்கூட்டும், பதப்படுத்தும், ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களுடன் வணிகர்கள் சந்திப்பும் நடைபெறும்.

வேளாண் வணிகத் திருவிழா மற்றும் கருத்தரங்கில் பெருவாரியான வேளாண் பெருமக்கள் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும் என்பதற்காக, சென்னைக்கு அருகாமையிலுள்ள 14 மாவட்டங்களிலிருந்தும் உழவர்களை அழைத்து வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்விழாவில், அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

முதலமைச்சர் அவர்களால் 27.9.2025 அன்று துவக்கி வைக்கப்படவுள்ள **வேளாண் வணிகத் திருவிழா 2025 இல்** உழவர்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், வணிகர்கள், ஏற்றுமதியாளர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் பெருமளவில் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### 'திராவிட மாடல்' அரசின் திட்டங்கள் குறித்து

# எச்.வி.ஹண்டே எழுதும் கடிதங்கள் எனக்கு ஊக்கமளிப்பவை!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, செப். 26 -

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முன்னாள் சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர் எச்.வி. ஹண்டே அவர்களை, அவரது மருத்துவமனைக்கு நேரில் சென்று சந்தித்ததையொட்டி சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு :-

**நம் திராவிட மாடல் அரசின் திட்டங்கள் குறித்த தமது பார்வைகளை முன்வைத்தும் தனிப்பட்ட முறையில் என்மீது அன்பு பொழிந்தும் முன்னாள் அமைச்சர் எச்.வி. ஹண்டே அவர்கள் எழுதும் கடிதங்கள் எப்போதும் எனக்கு ஊக்கமளிப்பவை!**

**99 வயதிலும் அயராமல் உழைத்து வரும் அவரை, அவரது மருத்துவமனையில் சந்தித்து மகிழ்ந்தேன்!**

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

### பா.ஜ.க. பொய் நாடகங்களை அரங்கேற்றினாலும்

# தாழ்த்தப்பட்டோருக்கு உரிய உரிமைகளைப் பெற்றுத் தருவோம்!

### மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் ராகுல் காந்தி சமூக வலைதளப் பதிவு!

*புதுடெல்லி, செப். 26 -*

*பா.ஜ.க. பல பொய் நாடகங்களை அரங்கேற்றினாலும், மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடி மற்றும் சிறுபான்மை மற்றும் பிற்படுத்தப்பட்ட சமூக மக்களுக்கு உரிய உரிமைகளை பெற்று தருவோம் என மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் ராகுல்காந்தி உறுதிபட தெரிவித்துள்ளார்.*

*ராகுல்காந்தி வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளதாவது:-*

*பீகார் மாநிலம் பாட்னாவில் நடைபெற்ற கூட்டத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்ட,*



*பட்டியலின சமூகத்தினரின் முன்னேற்றத்திற்காக பத்து வாக்குறுதிகளை அளித்துள்ளது. கல்வி என்பது மிகவும் முக்கியமானது என்றும், அதனை எட்ட, இத்தகைய சமூகத்தினரின் பங்கை அதிகரிக்க செய்வது அவசியம். பா.ஜ.க. பல பொய் நாடகங்களை அரங்கேற்றினாலும், மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடி மற்றும் சிறுபான்மை மற்றும் பிற்படுத்தப்பட்ட சமூக மக்களுக்கு உரிய உரிமைகளை பெற்று தருவோம்.*

*தனியார் பள்ளி மற்றும் பல்கலைக்கழங்களில் கல்வி பயில இட ஒதுக்கீடு முறை அமல்படுத்தப்படும் என்றும், குறிப்பாக தனியார் பள்ளிகளில் பாதிக்கும் மேற்பட்ட இடங்கள் எஸ்.சி., எஸ்.டி., ஓபிசி மற்றும் பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள மாணவர்களுக்கு வழங்கப்படும். தனியார் பள்ளிகளில் "விதிகளுக்கு பொருந்தவில்லை" என்ற நடைமுறை முற்றிலும் முடிவுக்கு கொண்டு வரப்படும். இது கல்விக்கான மோதல் மட்டும் அல்ல, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கான சமத்துவம் மற்றும் கண்ணியத்தை பெற்று தருவதற்கான மோதல். இது தான், சமூக நீதி மற்றும் சமத்துவ வளர்ச்சிக்கான உத்தரவாதம்.*

*இவ்வாறு மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பதிவிட்டுள்ளார்.*

### மதுரை – தேனூரில் 195 பயனாளிகளுக்கு

# 'கலைஞர் கனவு இல்லம்' திட்டத்தின் கீழ் கட்டுமானப் பணிகள்!

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பார்வையிட்டு ஆய்வு!

மதுரை, செப். 26 –

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.9.2025) மதுரை மாவட்டம் தேனூர் கிராமத்தில் ஒரே இடத்தில் மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள், கிராம பொதுமக்கள் உள்பட 195 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்பட்டு, கலைஞர் கனவு இல்ல திட்டத்தின் கீழ் கட்டுமான பணிகள் நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தமிழ்நாட்டில் குடிசை வீடுகளே இல்லை என்ற நிலையை உருவாக்கிட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2006 – 2011 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில் கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் ஏழை, எளிய மக்களுக்கு லட்சக்கணக்கான கான்கிரீட் வீடுகளை கட்டி வழங்கினார்.

தற்போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தை அறிவித்து 3.10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வீடுகளை கட்டி வழங்கி வருகின்றார்கள். மேலும் பயனாளிகளின் வீட்டில் 12,000 ரூபாய் மதிப்பீட்டில் கழிப்பறை கட்ட நிதி வழங்கப்படுகின்றது. பயனாளிகளுக்கு 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் வீடுகளை கட்டுவதற்கான பணியினை மேற்கொள்ள 100 வேலை நாட்களுக்கு தலா 33,600 ஊதியமாக வழங்கப்படுகின்றது.

மதுரை மாவட்டம் மதுரை வடக்கு வட்டம், சமயநல்லூர் உள்வட்டத்திற்கு உட்பட்ட தேனூர் கிராமத்தில் 128 மாற்றுத்திறனாளிகள், 37 திருநங்கைகள், தேனூர் கிராமத்தை சேர்ந்த 119 பயனாளிகள், 117 பொதுமக்கள் என மொத்தம் 401 பயனாளிகளுக்கு வருவாய்த்துறையின் சார்பில் இலவச வீட்டுமனை அனுபந்தப்பட்டா வழங்கப்பட்டது.

இந்த பயனாளிகளில் தற்போது வரை 74 மாற்றுத்திறனாளிகள், 37 திருநங்கை கள், தேனூர் கிராமத்தை சேர்ந்த 84 பயனாளிகள் என மொத்தம் 195 பயனாளிகளுக்கு கலைஞர் கனவு இல்லத்திட்டத்தின் கீழ் வீடுகட்ட ஆணைகள் வழங்கப்பட்டு வீடு கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் (24.9. 2025) மதுரை மாவட்டத்திற்கு வருகை தந்த தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மதுரை மாவட்டம் தேனூர் கிராமத்தில் ஒரே இடத்தில் மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள், கிராம பொதுமக்கள் உள்பட 195 பயனாளிகளுக்கு கலைஞர் கனவு இல்ல திட்டத்தின் கீழ் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

வீடுகள் கட்டும் பணிகளை அலுவலர்கள் தொடர் ஆய்வு மேற்கொண்டு வீடுகள் தரமாக கட்டப்படுவதையும், குறித்த காலத்திற்குள் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதை உறுதி செய்யுமாறும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இந்த குடியிருப்பு பகுதியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் ஒரு மரக்கன்றினை நட்டு நீரூற்றினார்.

இந்த ஆய்வின்போது வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர் தங்கதமிழ்செல்வன், மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார், திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருமதி க.வானதி உள்பட அரசு அலுவலர்கள், பயனாளிகள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

## கோவை மாநகர் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

கோவை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றி வரும் கோவை நா.கார்த்திக் அவர்களுக்குப் பதிலாக திரு. **துரை.செந்தமிழ்ச்செல்வன்** (87, ஆர்.கே.மில்ஸ் பி.காலனி, பீளமேடு, புதூர், கோவை 641004) அவர்கள் கோவை மாநகர் மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
*சென்னை 18.*
*நாள் : 25.09.2025.*

**துரைமுருகன்,**
*பொதுச்செயலாளர்,*
*தி.மு.க.*

### கழக சட்டதிட்ட விதி:18, 19-ன் படி,

## தி.மு.க. தீர்மானக்குழுச் செயலாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

**கழக சட்டதிட்ட விதி : 18, 19-ன் படி, தி.மு.க. தீர்மானக் குழுச் செயலாளராக கோவை திரு.நா.கார்த்திக்** (2, அண்ணாநகர் கிழக்கு, பீளமேடு அஞ்சல், கோவை 4) அவர்கள் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
*சென்னை 18.*
*நாள் : 25.09.2025.*

**துரைமுருகன்,**
*பொதுச்செயலாளர்,*
*தி.மு.க.*